நமது ஈழநாடு

www.namathueelanadu.com



குரல் 02 மலர் 19 ஜனவரி 2022 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelan



Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app

"கேணல் கிட்டு ஒரு தனிமனித சரித்திரம் ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு"

*- தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்*

# இங்கிலாந்தில் ஒரு யாழ்ப்பாணம்



# 'பாதுகாப்பு தடை நீக்கல் சான்றிதழ்'
# புலம்பெயர் தமிழர்களை ஒடுக்கவா?



தீபச்செல்வன்

இலங்கையின் குடியகல்வு குடிவரவுத் திணைக் களங்களின் முன்னால் கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ளும் மக்கள் கூட்டம் பெருகிக் கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் போர் எங்கள் மண்ணை இனக்கொலை செய்த போது எம் மக்கள் வான்வழியிலும் கடல் வழியிலும் அகதிகளாகச் சிதறிப் பறந்தனர். இப்போது இலங்கையின் பொருளாதார நெருக்கடி ஒரு போரைப் போல மக்களை விழுங்குகிறது. இந்த சூழலில் சிங்களவர்களும் இப்போது நாட்டைவிட்டு புலம்பெயரத் துவங்குகிறார்கள். தமிழ் மக்களின் தேசத்தை பெரும் இனவழிப்புப் போரினால் கையகப்படுத்திய போதும் இப்போது சிங்களவர்களும் வாழ முடியாத ஒரு நிலை இந் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. எல்லா நிகழ்வுகளுக்கும் ஒரு எதிர்வினை உண்டு என்பது அறிவியல் பூர்வமானது என்பதை இலங்கையின் அண்மைய கால நிகழ்வுகளைப் பார்த்து உணர முடிகிறது.

இந்த சூழலிலும் வெளிநாட்டவர்களை திருமணம் செய்ய எதிர்பார்க்கும் இலங்கையர்கள் ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சிலிருந்து "பாதுகாப்பு தடை நீக்கல் சான்றிதழ்" தேவை என்ற அறிவிப்பை ஸ்ரீலங்கா அரசாங்கம் விடுத்திருக்கிறது. பாதுகாப்பு அமைச்சின் உத்தரவுக்கு அமைய இச் சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டவர்கள் ஸ்ரீலங்காவில் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கவே இப்படிச் செய்யப் படுவதாக ஸ்ரீலங்காவின் பிரதமர் அலுவலக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். பொருளாதார நெருக்கடியால் ஸ்ரீலங்கா அதளபாளத்தை நோக்கி தள்ளப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு தலைவிரித்தாடுகிறது. பசியினால் மடிய வேண்டிய நிலை ஏற்படுமா என்று மக்கள் அச்சத்தில் உள்ளனர். இப்படியொரு நெருக்கடி நிலையிலும் ஏன் "பாதுகாப்பு தடை நீக்கல் சான்றிதழ்" என்ற அறிவிப்பு?

சிங்கள பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராக ஈழத்தில் இனவிடுதலைக்காக போராடிய மக்களை மாபெரும் இனப்படுகொலையை நிகழ்த்தி ஒடுக்கியது இலங்கை அரசு. மக்களின் சுதந்திரத்திகாகவும் தனித் தேசத்திற்காகவும் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மௌனிக்கச் செய்து முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நிகழ்த்தியது ஸ்ரீலங்கா அரசு. அதற்குப் பிறகு முழுமையான சிங்கள இராணுவ அடக்கமுறை ஆட்சியை மேற்கொள்ளும் ஸ்ரீலங்கா அரசு, ஈழத் தமிழ் மக்கள் தமது உரிமைகள் குறித்தோ, தம்மீதான ஒடுக்குமுறைகளைக் குறித்தோ குரல் எழுப்ப முடியாத சர்வாதிகார இனவொடுக்குமுறை ஆட்சியில் வடக்கு கிழக்கு தமிழர் தேசத்தை அமுங்க வைத்திருக்கிறது.

கைப்புண்ணை மறைக்க கண்ணாடி எதற்கு என்றால் போல மிகத் தெளிவாக வெளித்தெரியும் வகையில் ஈழம் எரியும் பிரச்சினைகளை இன்னும் சுமந்தபடியிருக்கிறது. நிலத்திற்கான போராட்டமும் தொன்மங்களை சிதைப்பதற்கு எதிரான போராட்டமும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலைக்கான போராட்டமும் இனப்படுகொலைக்கான நீதிக்கான போராட்டமும் தமிழ் சனங்களில் நெஞ்சில் தீயாய் எரிகின்றது. சாத்வீக வெகுசனப் போராட்டங்களை பெருமெடுப்பில் மேற்கொள்ள முடியாத நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பும் அச்சுறுத்தலும் ஈழ மண்ணை மிரட்டிக் கொண்டிருக்கிறது. தாம் எப்படியான அடக்குமுறையில் வாழ்கிறோம் என்பதைக்கூட சொல்ல முடியாத பேரினவாத அடக்குமுறை நிலவுகிறது.

தாய் நிலம் இப்படியொரு அடக்குமுறைச் சிறையில் இருக்கும் நிலையில் அந் நிலத்திற்காக குரல் கொடுக்கும் உன்னத பணியை புலம்பெயர் தேசம் மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் ஈழத்தில் நடந்த இனப்படுகொலைக்கு பன்னாட்டு விசாரணை தேவை என்ற ஈழ மக்களின் குரலை சர்வதேச அரங்கில் அதிர்வுடன் கொண்டு சேர்க்கும் பணியில் புலம்பெயர் உழைக்கிறது. ஈழத்தில் மக்கள் எத்தகைய அடக்குமுறை சூழலில் வாழ்கிறார்கள் என்றும் உண்மையில் இன்று ஈழ மக்கள் எதிர்பார்க்கும் தீர்வுதான் என்ன வென்றும் புலம்பெயர் மக்கள் குரல் கொடுக்கின்றனர். ஈழத்தின் ஆத்மாகவும் மனசாட்சியாகவும் குரலாகவும் புலம்பெயர் தேச மக்களின் முகங்களும் குரல்களும் ஒலிக்கின்றன.

இந்த நிலையில் புலம்பெயர் தேசத்தின் குரலை முறியடிக்க ஸ்ரீலங்கா அரசு பல்வேறு சூழ்ச்சிகளை கையாண்டு வருகின்றது. அதற்காக பல்வேறு அரசியல் மற்றும் இராணுவ நடவடிகைகளை மேற்கொண்டும் வருகின்றது. சில ஆண்டுகளின் முன்னர் பிரித்தானியாவில் உள்ள ஸ்ரீலங்கா தூதரகத்தில் அதிகாரியாக கடமையாற்றும் சிங்கள இராணுவத்தின் பிரிக்கேடியர் பிரியங்க பெர்ணான்டொ "தமிழர்களின் கழுத்தறுப்பேன்" என்று உடல்மொழியில் பகிரங்கமாகக் கொலை மிரட்டல் விடுக்கும் வகையில் செயற்பட்டமை சர்வதேச அளவில் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. ஸ்ரீலங்கா இராணுவத்தின் நோக்கையும் போக்கையும் குறித்த செயலின் வாயிலாக பிரியங்க பெர்னாண்டோ வெளிப்படுத்தியிருந்தார்.



கடந்த 2014ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ச அரசாங்கம், புலம்பெயர் தமிழர்கள் பல நூற்றுக் கணக்கானவர்களுக்கு நாட்டிற்குள் நுழையத் தடைவிதித்திருந்தது. வர்த்தமானி அறிவித்தல் ஊடாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கையில் ஈழத் தீவின் சொந்த மக்களுக்கே உள்நுழைவதற்கான தடை அரச சட்டமாக விதிக்கப்பட்ட கொடுமை ஸ்ரீலங்காவில் நடந்தது. புலம்பெயர் தேசத்தில் தமிழர்களின் உரிமை மற்றும் அவர்கள்மீதான மீறல்களை சுட்டிக்காட்டி செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மீதே இத்தகைய தடையை ஸ்ரீலங்கா அரசு விடுத்திருந்தது. புலம்பெயர் தேசத்தில் உள்ள அமைப்புக்களையும் ஈழப் போராட்டச் செயற்பாட்டாளர்களையும் குழப்பும் வகையில் பல்வேறு அரசியல் இராணுவ நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு மெற்கொண்டு வருகின்றது. இதற்காக எழுத்தாளர்கள், கலைஞர்கள் என்ற போர்வையில் சிலர் களமிறக்கப்பட்டு தமிழ் தேசத்தையும் விடுதலைப் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தும் வகையில் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் முயற்சிகளும் இடம் பெறுகின்றன. அத்துடன் இத்தகைய நபர்களை வைத்து இனவழிப்புக்கான நீதிக்காக போராடுபவர்களை பின்னால் இழுக்கும் சூழ்ச்சிகளையும் புலம்பெயர் தேசம் கண்டு முறித்து வருகிறது.

ஈழத்தில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி வைத்துக் கொண்டு இருந்த போதும் புலம்பெயர் தேசம் உரத்துக் குரல் கொடுப்பது சிங்கள தேசத்திற்குச் சிக்கலாக இருக்கின்றது. இதனால் புலத்தை அடக்க எல்லை கடந்த இராணுவ நடவடிக்கையை அல்லது எல்லை கடந்த இனவழிப்பை மேற்கொள்ள ஸ்ரீலங்கா முனைகின்றது. அத்துடன் ஈழத்தில் இனவிகிதாரத்தை வீழச்சியுறச் செய்வதில் வெற்றி காணப்பட்டுள்ள நிலையில் புலம்பெயர் தேச தமிழ் இளைஞர்கள் யுவதிகள் தாயக உறவுகளை திருமணம் செய்யத் தடுப்பதன் வாயிலாக புலம்பெயர் தேசத்திலும் இனவிகிதாரத்தை வீழ்ச்சியுறச் செய்யலாம் என ஸ்ரீலங்கா திட்டமிடுகிறது. அதற்காகவே "பாதுகாப்பு தடை நீக்கல் சான்றிதழ்" எனும் ஒப்பிரேஷன் டயஸ்போராவா என்ற சந்தேகம் வலுக்கிறது.



ஸ்ரீலங்காவின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் இன்றைக்கு புலம்பெயர் தேச மக்கள் இலங்கைத் தீவின் பொருளாதாரத்திற்குப் பெரும் பங்கை அளிக்கின்றனர். அங்கிருந்து தாயக உறவுகளுக்காக அனுப்பப்படும் நிதி இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பு எனலாம். ஈழத் தமிழர்களின் உரிமையை வழங்கி அவர்களின் தனித்தேசப் போராட்டத்தை அங்கீகரித்திருந்தால் இன்றைக்கு ஸ்ரீலங்காவின் பொருளாதார நெருக்கடிக்கு தமிழீழ தேசம் அள்ளியள்ளி நிதிக்கொடையை வழங்கியிருக்கும். ஆனால் ஸ்ரீலங்கா அரசோ ஈழத் தமிழ் மக்களை மாத்திரமின்றி ஈழ மண்ணில் நிலைத்திருந்த தமிழீழப் பொருளாதார வளத்தையும் பூச்சியத்திற்குச் செல்லும் அளவுக்கு அழித்திருந்தது.

புலம்பெயர் தேச மக்கள் நாடு திரும்புவதற்கும் தமது இனத்தை விருத்தி செய்வதற்கும் இடையூறாக இந்த அணுகுமுறை அமைவதுடன் ஸ்ரீலங்கா பொருளாதாரத்தில் இன்னும் பின்னடைவுகளை சந்திக்கவும் ஏதுவாக அமையும். எவ்வாறெனினும் புலம்பெயர் தேசத்தில் வாழும் ஈழ மக்கள், தம் தாய்நிலத்திற்கு திரும்பவும் பந்தம் கொள்ளவும் முழு உரித்துடையவர்கள். இது அவர்களின் தாய்நிலம். எனவே இலங்கை அரசு போடும் தடைகளை உடைத்து பயணம் செய்ய வேண்டிய தேவை ஒவ்வொரு ஈழத் தமிழ் மக்களுக்கும் உண்டு. உலகம் முழுவதும் பரந்து விரிந்து வாழும் புலம்பெயர் மக்கள் ஈழத் தமிழரின் சிறகுகளாகிவிட்டனர். எங்கள் தேச விடுதலை என்கிற சுதந்திர விடியலுக்காக அச்சிறகுகள் இன்னும் விரிந்து அசைந்து பறக்கட்டும்.



# தங்கம் வென்ற முல்லை மகள்

## ஒலிம்பிக்கிலும் தடம் பதிக்க காத்திருக்கிறாள்

### நமது ஈழநாட்டுக்கு சிறப்புப் பேட்டி

ஒலிம்பிக் போட்டியில் களமிறங்குவதே எனது இலக்கு. அதற்காக அடுத்து வரவுள்ள ஆசிய சம்பியன்ஷிப் போட்டியை எதிர்பார்த்திருக்றேன் என்றாள் தங்கமகள் கணேஸ் இந்துகா தேவி அண்மையில் பாகிஸ்தானில் நடைபெற்ற இலங்கை-பாகிஸ்தான் இரு நாடுகளுக்கிடையிலான International Savate Championship குத்துச்சண்டை போட்டியில் பங்கு பற்றிய முல்லைத்தீவை சேர்ந்த கணேஸ் இந்துகா தேவி 25 வயதுக்குட்பட்ட மகளிருக்கான 48-52 கிலோ எடைப்பிரிவில் தங்கப்பதக்கத்தை வென்று இலங்கைக்கும் தான் பிறந்த முல்லைத்தீவு மண்ணிற்கும் தமிழிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

தந்தையை இழந்த நிலையில் பெண் தலைமைத்துவ குடும்பத்திலிருந்து பல போராட்டங்களுக்கு மத்தியில் இவளது இந்த வெற்றி போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியதே!

குறித்த தொடரில் இலங்கை அணி 7 தங்கம் மற்றும் 5 வெள்ளிப்பதக்கங்களை வென்று சம்பியனாக மகுடம் சூட்டியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் முல்லையின் தங்க மகள் நமது ஈழநாட்டிற்கு வழங்கிய சிறப்பு நேர்காணல் பின்வருமாறு -

**உங்களைப்பற்றிய சிறு அறிமுகம்**

இலங்கையில் நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து எனது தாயார் நாகேஸ்வரியுடன் சிதம்பர புரம் முகாமிலிருந்து 2012 ஆம் ஆண்டில் வெளியேறி எனது ஆரம்பக்கல்வியை கரிப்பட்டமுறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் பின்னர் உயர் கல்வியை ஒட்டிசுட்டான் மகா வித்தியாலத்தில் பயின்றேன்.

**இலங்கையின் பெண்கள் குத்துச்சண்டையில் அதிக ஈடுபாடு காட்டாத நிலையில் நீங்கள் எவ்வாறு இதில் ஈர்க்கப்பட்டீர்கள்.**

எனக்கு சிறு வயதிலிருந்து இதில் ஆர்வம் உண்டு. எனது பாடசாலை காலத்தில் ஒட்டிசுட்டானில் கல்வி பயின்று கொண்டிருந்த காலத்தில் நான் முதன் முதலில் குத்துச் சண்டை போட்டிக்கு அறிமுகமானேன். அப்போது கிடைத்த வெற்றிகள் என்னை மென்மேலும் இதனைத் தொடர உந்து தள்ளின.

அதன் படி பாடசாலை கல்வியையடுத்து கண்டியில் குத்துச்சண்டை தொடர்பில் மேலும் கற்றுக் கொள்ளும் சர்ந்தப்பம் கிடைத்தது. இரண்டு ஆண்டுகள் அங்கு நான் எனக்குள் இருந்த குத்துச்சண்டை திறனை வளர்த்துக்கொண்டதுடன் அதன் நுணுக்கங்களையும் கற்றுக்கொண்டேன்.

**இந்த வெற்றியை அடைய நீங்கள் கடந்து வந்த பாதை எவ்வாறான சவால் நிறைந்தது என்பதை கூறமுடியுமா?**

பெண்கள் இவ்வாறானதொரு உயர் நிலையை அடைவது என்பது மிகவும் சவால் நிறைந்த போராட்டமே. அதிலும் இலங்கையை பொறுத்த வரையில் சுதந்திரம் மிகவும் குறைவு என்றே சொல்லாம். ஒரு பெண் எதாவது ஒரு விடயத்தில் சாதிக்க வேண்டும் என்று துணிந்து இறங்கினால் அதற்கு எமது சமூகம் பல வேலிகளை போட்டு நிற்கும். என்னிடமே பலர் கூறியுள்ளனர் ஷநீ பெண் பிள்ளை. உனக்கு இந்த விளையாட்டுக்கள் எல்லாம் தேவையில்லை குடும்பத்தை கவனித்துக்கொண்டு வீட்டில் இரு; என்று.

ஆனால் சமூகத்திற்கு மற்றவர்களுக்கு பயந்து எமது திறமையை நாமே முடக்கி விடக்கூடாது. பெண்களாலும் சாதிக்க முடியும். அவர்களாலும் முன்னுக்கு வர முடியும். அதேவேளை பெண்களின் கனவுகளுக்கு முதலில் அவர்களது குடும்பத்தினர் நல்லதொரு ஒத்துழைப்பபையும் ஊக்கத்தையும் வழங்க வேண்டும். நான் இந்த நிலையை அடைவதற்கு எனது அம்மா மற்றும் ஆசிரியர்கள் நண்பர்களின் ஒத்துளைப்பே காரணம்.



**எமக்குள்ள திறமைகளை நாம் இனம் கண்டு அதனை அடுத்த கட்டுத்திற்கும் நகர்த்துவதற்கு பொருளாதாரம் எமக்கு கை கொடுக்கவேண்டும். அந்தவகையில் நீங்கள் பொருளாதார ரீதியில் எவ்வாறான சவாலினை எதிர் கொண்டுள்ளீர்கள்?**

அப்பா இறந்ததன் பின்னர் அம்மாவுடனான பெண் தலைமைத்துவ குடும்பமே எமது குடும்பம். இந்நிலையில் எனது பாடசாலை காலத்தில் கற்றலுக்கான செலவுகளே மிகவும் சவால் நிறைந்தாக இருந்தது, இதன் பின்னர் நான் இவ்வாறானதொரு இலக்கில் பயணிக்க ஆரம்பிக்கும் போது அதற்கான பொருளாதாரம் எனக்கு ஈடுகொடுக்கவில்லை. இருந்து எனது அம்மா அந்த சவால்களை எதிர்கொண்டு என் கனவிற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கினார்.

பாகிஸ்தானில் தற்போது தங்கம் வென்ற போட்டியே எனது முதலாவது சர்வதேச போட்டி. அதில் எவ்வாறாவது சாதித்து விடுவேன் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனாலும் அங்கு செல்வதற்கான பொருளாதார வசதி என்னிடம் போதியதாக இருக்கவில்லை. இந்நிலையில் எனக்கு பலர் தாமாகவே முன்வந்து உதவிகளை செய்ததன் மூலமே என்னால் அங்கு செல்ல முடிந்தது. இவ்வேளையில் எனக்கு உதவிய அத்தனை நல் உள்ளங்களிற்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**இந்த மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து உங்களின் அடுத்த இலக்குகள் எதனை நோக்கி உள்ளன?**

இன்னும் சில மாதங்களில் ஆரம்பமாகவுள்ள ஆசிய சம்பியன்ஷிப் போட்டியில் பங்குபற்றவுள்ளேன். அதற்கான பயிற்சிகளிலேயே தற்போது எனது முழுக்கவனமும் உள்ளது. அதிலும் நிச்சயம் சாதிப்பேன் என்ற நம்பிக்கையுண்டு. அதனைத் தொடர்ந்து 2024 ஆம் ஆண்டு பிரான்ஸில் நடைபெற்வுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்றுவதே எனது பெரும் இலக்காக உள்ளது. அதற்காக என்னை நான் மேலும் தகுதிப்படுத்தவுள்ளேன்.

**உங்களைப் போன்று மேலும் பல சாதனையாளர்கள் உருவாகவேண்டும். அவர்களுக்கு நீங்கள் கூறும் உங்களின் அனுபவ அறிவுரை யாது?**

இனம் மதம் மொழி என்ற வேறுபாடு எமது நாட்டில் தாராளமாக உள்ளது. ஆனால் அது விளையாட்டில் இருக்கக் கூடாது என்பதே எனது வேண்டுகோளாக உள்ளது. எனவே இவற்றைக் கடந்து நாம் சாதிக்க வேண்டும்.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 02 மலர் 19 ஜனவரி 2022 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com

# சமஷ்டி தீர்வும் இந்திய நம்பிக்கையும்

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்காக இணைந்த வட,கிழக்கில், சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டி தீர்வொன்று வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்த் தேசியப்பரப்பில் உள்ள ஆறு தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்து ஏழு தலைவர்கள் கையொப்பமிட்டு ஆவணமொன்றை அனுப்பி வைத்திருக்கின்றனர்.

இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களோ அல்லது அந்த ஆவணத்துடன் இணைக்கப்பட்ட விடயங்களோ இந்திய பிரதமருக்கு, அல்லது இந்திய இராஜதந்திரத் தரப்புக்களோ அறியாதவை, தெரியாதவை அல்ல.

ஆனால், ஒன்றுக்கொண்டு முட்டி மோதிக்கொண்டிருந்த தமிழ்க் கட்சிகளும் தலைவர்களும் ஒன்றிணைந்து கையொப்பமிட்டு ஒரு ஆவணத்தை வழங்கியிருக்கின்றார்கள் என்ற விடயம் மட்டும் தான் வரவேற்கக் கூடிய விடயம்.

ஆவணத்தைக் கொடுத்த பின்னர் இந்தியா எவ்விதமாக நடந்து கொள்ளப்போகின்றது என்பது தான் இப்போதைக்கு உள்ள கேள்வியாகும். ஏனென்றால் 1987ஆம் இலங்கை, இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. இற்றைக்கு 34 ஆண்டுகளாக இந்தியாவால் தான் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தையே முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

இதனைவிடவும், 2006இல் மக்கள் விடுதலை முன்னணி வடக்கு, கிழக்கை பிரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி நீதிமன்றம் சென்று அதனை பிரித்தபோது, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வல்லமை மிக்க இராஜதந்திரத்தினைக் கொண்டிருந்த இந்தியாவால் எதுவுமே செய்திருக்க முடிந்திருக்கவில்லை.

அதன்பின்னர், தமிழ் மக்களுக்காகவே தமிழ் மக்களின் பிரதிநிதி யாகவே இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது என்று கூறி வரும் இந்தியாவால் தமிழ் மக்கள் முள்ளிவாய்கால் பேரவலத்திற்குள் சிக்குண்டு இருக்கையில் எதனையும் செய்திருக்க முடியவில்லை.

அதன் பின்னர், பேரவலத்திற்குள் சிக்கிய மக்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும், இதர சர்வதேச மன்றங்களிலும் நீதி கேட்டுப் போராடியபோது, இந்தியா 'பாம்புக்கும் நோகாது, தடிக்கும் நோகாது' தமிழர்களையும் பகைக்காது, சிறிலங்கா அரசையும் பகைக்காது நழுவிச் சென்றது. தற்போது அவ்வாறே இருக்கின்றது.

இவற்றையெல்லாம் விடவும், மிக கிட்ட உதாரணமாக, சிறிலங்கா தற்போது மிகக் கடுமையான கடன்பொறிக்குள் சிக்கியிருக்கின்ற நிலையில் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யின் விஜயத்தினை அடுத்து பாரிய உடன்படிக்கைகள் எவையும் கைச்சாத்தாகி சிறிலங்காவில் சீனாவின் பிரசன்னம் மேலும் வலுப்பெற்றுவிடுமோ என்ற ஐயம் இந்தியாவை தொற்றிக் கொண்டிக்கின்றது.

இந்நிலையில் சிறிலங்காவின் பொருளாதாரத்தினை மீட்டெடுப் பதற்கு 900மில்லியன் டொலர்களை உடன் வழங்கியிருக்கின்றது. இதனையும் இன்னமும் பல மில்லியன் டொலர்களை சிறிலங்காவுக்க வழங்குவதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கப்படுவதாகவும் தகவல்கள் உள்ளன.

ஆக, இந்தியாவும் சீனா போன்றே அரசுகளுடனான உறவுகளில் தான் அதிக கவனம் செலுத்துகின்றது என்பது தான் யதார்த்தமாகும். இந்த யதார்த்த நிலையில் இருந்து பார்க்கின்றபோது, தமிழ் அரசியல் தலைமை கள் தொடர்ந்தும் இந்தியா மீது கொண்டிருக்கும் நம்பிக்கையால் பயனேது என்ற நிலையே உருவாகின்றது.

அதுமட்டுமன்றி, தற்போதைய நிலையில் இந்தியா ஒற்றை யாட்சிக்குள் வட,கிழக்கு இணைப்பற்ற 13ஆவது திருத்தச்சட்டத்தினை அமுலாக்குவதையே தொடர்ச்சியாக கூறிக்கொண்டு இருக்கின்றது. அவ்விதமான நிலைப்பாடுடைய நாடொன்றிடம் சமஷ்டியைக் கோருவது என்பது கல்லில் நார் உரிப்பதற்கு சமனானது.

ஆக, தமிழ் தலைமைகளின் இந்திய நம்பிக்கையும், சமஷ்டிக் கனவும் இன்னும் பல தசாப்தங்களுக்கு நீடிக்கப்போகின்றது. அதுவரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வும் நீடிக்கத்தான் போகின்றது.

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 16 ஆவது ஆண்டு நினைவு நாள்




திருகோணமலையில் படுகொலைசெய் யப்பட்ட ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜ னின் 16வது ஆண்டு நினைவு நாள் 24.01.2022 அன்று அனுஸ்டிக்கப்பட்டது.

கடந்த 2006 இல் உயர்தரக் கல்வியை முடித்து பின்புஇ பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருந்த 5 மாணவர்கள்இ திருகோணமலை கடற்கரையில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்ட இந்த மாண வர்களை இவர் நிழற்படமெடுத்து செய்தி வெளியிட்டிருந்தார். மாணவர்களின் இறப்புக்கு கைகுண்டுத் தாக்குதலே காரணம் என்று விசாரணையை திசைதிருப்ப முயற்சிக் கப்பட்டபோது, இவர் எடுத்த நிழற் படங்கள் தலையில் சுடப்பட்டு இறந்ததை தெளிவாக எடுத்துக் காட்டின. இதனால் அரசுக்கு சர்வதேச ரீதியில் அவப்பெயரும் அழுத்தங்களும் ஏற்பட்டன.

அத்துடன், கொலை செய்யப்படுவதற்கு முதல் நாள்இ அரசு சார்பு ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியினர் திருகோணமலையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் அடங்கிய தகவல்களைஇ இவர் சுடரொளியில் வெளி யிட்டிருந்தார்.

இவ்வாறு துணிச்சலுடன் உண்மையை வெளிப்படுத்திய சுகிர்தராஜன் கடந்த 2006 ஜனவரி 24 ஆம் திகதி, திருகோண மலையிலுள்ள ஆளுநர் செயலகத்திற்கு அருகாமையில் வைத்து சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.

இந்நிலையில் சுகிர்தராஜனின் 16வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு மட்டக்களப்பு மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடக வியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையம் ஆகியன இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் படுகொலைசெய்யப்பட்ட ஊடக வியலாளர் சு.சுகிர்தராஜனின் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

## மறைந்த காட்டூனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து...



# இங்கிலாந்தில் ஒரு யாழ்ப்பாணம்



## பெயர்ப்பலகை திறப்பும் மாபெரும் பொங்கல் நிகழ்வும்

ஈழத்தமிழர்களின் கலாசார நகரான யாழ்ப்பாணம் பிரித்தானியாவின் லண்டன் பெருநகர பிராந்தியத்தில் ஒன்றான, தேம்ஸ் ஆற்றின் மீதுள்ள கிங்ஸ்ரன் (Kingston Upon Themes) நகரத்துடன் இணைக்கப்பட்டதை வெளிப்படுத்தும் அறிவிப்பு பலகை உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்ட நிகழ்வும், தமிழ் கலாச்சார மாதமாக ஜனவறியை கொண்டாடும் மாபெரும் பொங்கல் நிகழ்வும் சனிக்கிழமை (22 ஜனவரி) இலண்டனில் இடம்பெற்றது.

தமிழ் மொழியையும் அதன் கலை கலாச்சார பண்பாடுகளை பிரித்தானியாவிலும் கொண்டாடும் வண்ணம் கடந்த டிசம்பர் (2021) மாதம் பிரித்தானிய பெரு நகர அவை ஜனவரி மாதத்தை பிரித்தானியாவில் தமிழர் பாரம்பரிய மாதமாக பிரகடணப்படுத்தியது.

அதன் பிரகாரம், பிரித்தானியாவில் இம்மாதம் தமிழர் மரபுரிமை திங்கள் பிரித்தானிய பாரளுமன்றம் உட்பட பல இடங்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் பிரித்தானாயாவை தளமாக கொண்டு இயங்கும் தமிழ் தகவல் நடுவம் (TIC), மற்றும் சமூக அபிவிருத்திக்கான மையம் (CCD) மற்றும் தமிழ் பாடசாலைகள் இணைந்து நாடாத்திய மாபெரும் தமிழர் மரபுத்திங்கள் கலாச்சார பேரணியும் பொங்கல் விழாவும் லண்டன் கிங்ஸ்ரன் பகுதியில் உள்ள நகரமான நியூ மோல்டனில் (New Malden) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்ப பிரதான நிகழ்வாக கிங்ஸ்டன் நகர பெயர்ப்பலகையில் யாழ்ப்பாண நகரத்தின் பெயரும் இணைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இரு நகரங்கள் இணைவுத்திட்ட அடிப்படையில் லண்டனின் கிங்ஸ்ரன் அப்பொன் தேம்ஸ் நகரம் இலங்கையின் யாழ்ப்பாண நகரை கடந்த 2016 ஆம் ஆண்டு தனது இரட்டையராக ஏற்றுக்கொண்டது. இதற்கான ஒப்பந்தத்தை அப்போதைய வட மாகாண முதலமைச்சாராக இருந்த தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையிலேயே லண்டன் கிங்ஸ்ரன் நகர பெயர் பலகையுடன் யாழ்ப்பாணத்தின் பெயரையும் இணைத்து Kingston Twinned With Jaffna என்ற பெயர் இன்று உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

தமிழர்களின மங்கள வாத்தியங்களான தவில் நாதஸ்வரம் மற்றும் பறை வாத்திய இசைகள் முழங்கள் வண்ண நிற பலூன்கள் வானில் பறக்கவிடப்பட்டதை தொடர்ந்து, பிரித்தானி தாராளவாத ஜனநாயக கட்சி தலைவரும் (Liberal Democratic) பாராளுமன்ற உறுப்பினருமாகிய மதிப்பிற்குரிய சேர் எட் டேவி (Rt. Hon. Sir. Davey) அவர்கள் குறித்த பெயர் பலகையினை திறந்து வைத்தார். கிங்ஸ்டன் நகரபிதா உட்பட பல சிறப்பு விருந்தினர்களும் கலந்த கொண்டனர்.

அதனை தொடர்ந்து, அங்கிருந்து தமிழரின் வீர முரசான பறை இசை முழங்க, தமிழர் பாரம்பரிய கலைகளான குதிரையாட்டம், கோலாட்டம், மயிலாட்டம், கும்மி, காவடி, கரகம், சிலம்பம் என்பவற்றின் வண்ண அணிவகுப்புடன் பொங்கல் நடைபெற்ற சதுக்கம் நோக்கி கலாச்சார பேரணி மிகச்சிறப்பாக பிரதான வீதிவழியாக நகர்ந்து சென்றது. அங்கு பொங்கல் விழாவும் தமிழர் கலை கலாச்சார நிகழ்வுகளும் நடாத்திக்காண்பிக்கப்பட்டன.

குறிப்பாக, அருகிவரும் தமிழர் வீரக்கலைகளான கம்பு, சிலம்பாட்டம், களரி, அடிமுறை உட்பட்ட மிக அரிய தமிழர் வீரக்கலைகள் செய்து காண்பிக்கப்பட்டன. பனை உற்பத்திப்பொருட்கள் மற்றும் தமிழர் பாரம்பரிய வரலாற்று நூல்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

அனைவருக்கும் பொங்கல் பிரசாதங்கள் வழங்கப்பட்டதை தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்களின் பேச்சுக்கள் இடம்பெற்றன.

தொடர்ந்து, அருகில் உள்ள மண்டபத்தில் தமிழர் வரலாறு பற்றிய கண்காட்சி இடம்பெற்றது. அரிய புகைப்படங்கள், தமிழர் பாவனை பொருட்கள், இசைக்கருவிகள், பாரம்பரிய உணவுகள் என பல பொருட்கள் காண்பிக்கப்பட்டன. அத்துடன், கிராமிய நடனங்கள், நாட்டு கூத்து மற்றும் உடுக்கு கச்சேரி உட்பட்ட பல உள்ளக நிகழ்வுகளும் இடம்பெற்றன. கடும் குளிர் மற்றும் கோவிட் அச்சத்தின் மத்தியிலும் பலநூற்றுக்கணக்கில் மக்கள் பெரு வெள்ளமாக திரண்டு கண்டுகளித்தனர்.






















படங்கள்- சிதம்பரசுப்பிரமணியம் திருச்செந்தில்நாதன்

# இங்கிலாந்தில் நடைபெற்ற தமிழர் மரபுத் திங்கள் நிகழ்வின் பதிவுகள்


































# தாரிக் அஹமட்டின் தரமான நழுவல்

**-தேசிகன்-**

பிரித்தானியாவின் தென் ஆசிய மற்றும் பொதுநலவாய அமைப்புக்கான அமைச்சர் தாரிக் அஹமட் பிரிவு சிறிலங்காவுக்கு விஜயம் செய்து வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்றிருந்ததோடு, ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், மற்றும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் தலைமைகள் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

அமைச்சர் தாரிக் அஹமட் பிரபுக்கும், பிரித்தானியா சென்ற சுமந்திரனுக்கும் இடையில் கடந்த ஆண்டு நவம்பர் 25ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பின் போது தான் அமைச்சர் சிறிலங்கா செல்வது பற்றிய தகவல்கள் வெளியில் வந்திருந்தன.

அமைச்சர் தாரிக் அஹமட்டின் இந்த விஜயம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாதக் கூட்டத்தொடர் நடைபெறுவதற்கு முன்னதாக அமைந்திருக்கின்றமை இதில் முக்கிய விடயமாகும்.

அந்த வகையில் பார்க்கின்றபோது அமைச்சர் தாரிக் அஹமட் நிச்சயமாக பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் நின்று தான் விடயங்களை கையாள்வார் என்ற பாரிய எதிர்பார்ப்பு ஒன்று அவரின் சிறிலங்கா விஜயத்தின் மீது இருந்தது.

அவ்விதமான எதிர்பார்ப்பினை மையப்படுத்தி தான், சிறிலங்கா விஜயத்தின் போது அமைச்சர் தாரிக் அஹமட் பிரிவுவிடத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் உரிமையுடன் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தார்கள்.

அதாவது, 'நீங்கள் சந்திக்கும் அனைவரையும், குறிப்பாக அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த, இப்போதைய நாட்டின் ஜனாதிபதியை, எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை நீங்கள் கேட்க வேண்டியது கட்டாயம்.

ஒருவேளை உங்களது பிள்ளை காணாமல் ஆக்கப்பட்டு அது தொடர்பாக நீங்கள் கேட்கும் போது, மிரட்டப்பட்டும், அச்சுறுத்தப்படும் அவதூறுகள் கூறப்பட்டும், அவர்கள் காணாமல் போனதற்கு நீங்கள்தான் காரணம், அவர்களை அழைத்து சென்றது யார் என உங்களுக்கு தெரியாதா எனவும் கேட்கப்பட்டால் உங்களது மனநிலை எப்படி இருக்கும் என்பதை சிந்தித்து பாருங்கள்.

நாம் கடந்த 13 வருடங்களாக எந்தவித மரியாதையும் இன்றி இவ்வாறு துன்பங்களை அனுபவித்து வருகின்ற நிலையில், இப்போது நீங்கள் பொருளாதாரத்தையும் ஈடுபாட்டையும் பற்றி மாத்திரம் முன்னுரிமைப்படுத்தியும், பொறுப்புக்கூறல் தொடர்பாக வெறும் குறிப்பு ஒன்றை மாத்திரம் முன்வைத்துள்ளமையும் நாம் அனுபவிக்கும் மற்றுமொரு துயரமாகும்.

இந்த அரசாங்கம் உண்மையாகவே ஜெனிவா நடைமுறைகளுக்கு ஏற்ப கடந்த காலம் தொடர்பான நிகழ்வுகளை முன்னெடுக்க போகிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

ஜேர்மனி சிரியாவிற்கு சர்வதேச சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு உதவி செய்தது போல நாம் நீதியைப் பெறுவதற்கு இங்கிலாந்து அரசாங்கம் எமக்கு உதவி செய்ய வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

அதுவரையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புபட்ட இராணுவ அதிகாரிகள் மீது தடை விதிக்க வேண்டும் எனவும் நாங்கள் வலியுறுத்துகிறோம்' என்பது அந்தக் கோரிக்கையாகும்.

அதேபோன்று கிழக்கிற்குச் சென்றபோதும், முஸ்லிம் அனுபவிக்கும் பிரச்சினைகளை சிவில் சமூகங்களும், மக்கள் பிரதிநிதிகளும் வெளிப்படுத்தியிருந்தனர்.

சிங்கள, பௌத்த பெருந்தேசியவாதத்தில் திளைக்கின்ற தற்போதைய ராஜபக்ஷ அரசாங்கத்தில் சிறுபான்மைத் தேசிய இனங்களான தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் நேரடியாகவே பாதிக்கப்படுகின்றனர் என்பது உலகறிந்த உண்மை.

அதேநேரம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்ற 46.1தீர்மானத்தின் பரிந்துரைகளையும், ஏனைய சர்வதேச வாக்குறுதிகளையும் தவிர்த்து தான் இந்த அரசாங்கம் செயற்படுகின்றது என்பதும் வெளிப்படையானது.

இவை எல்லாவற்றையும் விட, இந்த நாட்டில் இனப்பிரச்சினையொன்றே இல்லை என்றும், கொள்கைகளைக் கைவிட்டு அபிவிருத்திக்கு வாருங்கள் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வுக்கான கொள்கை விளக்க உரையில் கூறியிருக்கின்றார்.

ஆக, ஜனாதிபதியின் கூற்றுப்படி இனப்பிரச்சினைக்கான தீர்வும் இல்லை, பாதிக்கப்பட்ட தரப்பினர் எதிர்பார்த்துக் காத்திருக்கும் பொறுப்புக்கூறலுமில்லை என்பது தான் அவர் வெளிப்படுத்தியுள்ள செய்தி.

இந்த இரண்டுமில்லாத அபிவிருத்தியினை மட்டும் தமிழ் மக்கள் ஏற்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆகவே தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியும் என்பது தான் ஜனாதிபதி ஒட்டுமொத்தமாக கூற விளைந்துள்ள செய்தியாகும்.

இவ்விதமான ஜனாதிபதி ஒருவரைச் சந்திப்பதற்கு சென்றிருந்ததார் அமைச்சர் தாரிக் அஹமட் பிரிவு. அவரிடத்தில் மிகக் காட்டமான தொனியில் இந்த விடயங்கள் பற்றிய கரிசனைகளைத் வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

மாறாக, அமைச்சர் தாரிக் அஹமட், ஜனாதிபதி கோட்டாபயவைச் சந்தித்தபோது, 'மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை முன்னெடுத்துவரும் வேலைத் திட்டங்கள் மிக முன்னேற்றகரமாக உள்ளன' என்று கூறியுள்ளார்.

அதுமட்டுமன்றி, இலங்கையின் நெருங்கிய மற்றும் நடைமுறை நண்பராக ஒத்துழைக்க, ஐக்கிய இராச்சியம் எப்போதும் தயாராக இருப்பதாகவும் புலம்பெயர் தமிழர்களை முதலீடுகளைச் செய்வதற்கு வருகை தருவதற்கான ஜனாதிபதியின் அழைப்பினை எடுத்துச் செல்வதாகவும் அமைச்சர் தாரிக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், பிரதமர் மஹிந்தவுடனான சந்திப்பின்போது, சிறிலங்காவுக்கான தற்போதைய ஒத்துழைப்புகளுக்கு மேலதிகமாக, சுற்றுலாத்துறைக்கு ஒத்துழைப்பு நல்குதல், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்தல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி துறையின் அபிவிருத்தி தொடர்பில் முன்னெடுக்கக் கூடிய செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸுடனான சந்திப்பில், பன்முகத்தன்மை தொடர்பில் கரிசனைகள் காண்பிக்கப்பட்டுள்ளதோடு, ஐக்கிய இராச்சியத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாக தடை செய்தமை உட்பட, பயங்கரவாத எதிர்ப்புத் துறையில் வழங்கப்பட்ட ஆதரவிற்காக சிறிலங்கா அரசாங்கத்தின் ஆழ்ந்த பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை அமைச்சர் தாரிக் பெருமிதமாக ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

இவ்விதமானக அமைச்சர் தாரிக் சிறிலங்கா அரசாங்கத்திற்கு 'ஒத்தூதல்' செய்துவிட்டு பின்னர் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது, வாக்குறுதிகளை செயல்வடிவில் காண பிரித்தானியா விரும்புகின்றது' என்பதை தெரிவித்ததாக கூறியுள்ளார். அதேபோன்று முஸ்லிம் தலைமைகளிடத்திலும் அவ்விதமான தெளிப்பட்ட கருத்தினையே வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த நிகழ்வுகளின் அடிப்படையில் அமைச்சர் தாரிக் அஹமட் மிகத் தரமான முறையில் அனைத்து தரப்பினரிடத்திலும் இருந்தும் நழுவியுள்ளார் என்பது அப்பட்டமாக வெளிப்பட்டு நிற்கின்றது.

அதுமட்டுமல்ல, இந்த நழுவல் போக்கானது, அடுத்த மார்ச் மாதக் கூட்டத்தொடரில் பிரித்தானியா மீண்டுமொரு காலஅவகாசத்தினை வழங்குவதற்கான பிரேரணையை கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கான கட்டியத்தை கூறியாகிவிட்டது.

ஆக, அமெரிக்காவும், மேற்குல நாடுகளும், சிறுபான்மை தேசிய இனங்களின் பிரச்சினைகளை குறிப்பாக தமிழ்த் தரப்பின் பொறுப்புக்கூறல் விவகாரத்தினை தமது நலன்களுக்குள் கட்டுப்படுத்தி வைத்து தொடர்ச்சியாக கையாள்வதற்கே விளைகின்றன என்பது மீண்டும் ஒருதடவை உறுதியாகியுள்ளது.

இவ்வாறான நிலைமை இருக்கையில், சர்வதேச சமூகத்திடம் நீதியையும், நியாயத்தையும் எதிர்பார்ப்பதன் ஊடாக கிடைக்கப்போவது என்ன? வெறும் காலங்கள் கடந்து செல்வது தான்.

# பிரதமர் மோடிக்கு ஆவணம்
# சுயநிர்ணயமும் இந்தியாவும்



-தாயகன்-

யாழ்.திருநெல்வேலியில் உள்ள திண்ணை விடுதியில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதி தமிழ் பேசும் கட்சிகளாக 'இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடத்தில் 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தல்' என்ற விடயம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

பின்னர் அதில் தமிழரசுக்கட்சியையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று மனோகணேசனும், ரவூப் ஹக்கீமும் எடுத்த முயற்சியின் பலனாக கடந்த ஆண்டு டிசம்பர் 21இல் கொழும்பு குளோபல் டவர் விடுதியில் நடைபெற்ற சந்திப்பில் சம்பந்தன் பங்கேற்றார்.

அவர், வரும்போதே, துணைக்கு சுமந்திரனையும் அழைத்துக்கொண்டு தான் வந்திருந்தார். சுமந்திரன் ஏலவே தனது திட்டத்தின்படி இலங்கைத் தமிழரசுக்கட்சியின் அரசியல் குழு கூட்டத்தைக் கூட்டி எவ்விதமாக கடிதம் அமைய வேண்டும், அதன் தலைப்பு என்ன உள்ளிட்ட விவகாரங்களுக்கு பச்சை சமிக்ஞையையும் பெற்றிருந்தார்.

இதனால் சுமந்திரன் கையில் இருந்த ஆவணம், தமிழரசுக்கட்சியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணம். ஆனால் சந்திப்பில் முன்வைக்கப்பட்ட ஆவணம் ரெலோவி-னால் தயாரிக்கப்பட்டு ஏனைய தலைவர்களாக விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா, சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணம்.

இதில், மனோவும், ரவூப்பும் பாவம். அவர்கள் ரெலோ தயாரித்த 13ஆவது திருத்தச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தல் என்ற ஒன்றரைப்பக்க ஆவணத்தை நம்பியே இக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர்.

ஈற்றில் வாதப்பிரதிவாதங்களுக்கு அப்பால், 'தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதும் இலங்கை இந்திய ஒப்பந்தமும்' என்று தலைப்பு மாற்றப்பட்டது. அத்துடன் உள்ளக சுயநிர்ணயம் பற்றியும் கூறப்பட்டது. வடக்கு, கிழக்கு இணைப்பு பற்றி கூறப்பட்டது.

ஈற்றில் மலையக, முஸ்லிம்களின் அபிலாஷைகள் என்ன என்று கேள்விகள் எழவும் மனோவும், ரவூப்பும் 21ஆம் திகதிய ஆவணத்தினைப் பெற்றுக்கொண்டு தங்களுடைய கூட்டுக்கள், கட்சிகளுக்குள் கலந்துரையாட சென்றுவிட்டனர்.

பின்னர், மீண்டும் சம்பந்தனுடன் சந்திப்பு, பேச்சுவார்த்தை என்று இழுபட்டு இற்றில் ஜனவரி முதலாம் திகதி சுமந்திரனின் இல்லத்தில் வைத்து பிறிதொரு ஆவணம் தயாரிக்கப் பட்டது. இதில் சுமந்திரனுடன் நடைபெற்ற பனிப் போரினால் மனோ அங்கு செல்வதை தவிர்த்த நிலையில் ஹக்கீம் உள்ளிட்டவர்கள் சென்று ஆவணமொன்றைத் தயாரித்தார்கள்.

எனினும், அன்று மாலையே மெய்நிகரில் கூடிய தமிழரசு அதனை நிராகரித்தது. இந்த தீர்மானத்துடன் சம்பந்தனைச் சந்தித்த சுமந்திரன் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக செயற்பட வேண்டாம் என்று பகிரங்கமாகவே கூறினார்.

பின்னர் மனோவும், ரவூப்பும் அப்படியே அமைதியாகவிட ஈற்றில் வடக்கு, கிழக்கில் செயற்படும் ஆறு கட்சிகளைச் சேர்ந்த ஏழு தலைவர்களும் கையொப்பமிடுவதென தீர்மானித்தார்கள்.

கடந்த டிசம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட கடிதத்திற்கு ஒருவாறு கையொப்பமிட்டார்கள். எனினும் முதல் சுற்றில் மாவை.சேனாதிராசா மட்டும் கையொப்பமிடாதிருந்தார். இதற்குள் இந்திய உயர்ஸ்தானிகரை சந்திப்பதில் நேர ஒதுக்கீட்டு சிக்கல்கள் எழவும் கையொப்பமிட்ட கடிதம் பகிரங்கமானது.

பின்னர், கூடிக்கதைத்த தலைவர்கள் சில திருத்தங்களை செய்ய வேண்டும் என்ற சுமந்திரனின் கருத்தால் மீண்டும் சர்ச்சைகள் ஏற்பட்டது. அச்சமயம், 'தமிழரசுக்கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக சென்றால் கட்சித்தலைவரும், சிரேஷ்ட தலைவரும் தீர்மானத்தினை மதிக்கவில்லை என்று பகிரங்கப்படுத்துவேன்' என்று சுமந்திரன் மாவை, சம்பந்தனுக்கு எச்சரிக்கையும் செய்தார்.

இதனால், மாவை மட்டும் கையொப்பமிட வேண்டியிருந்த நிலையில் அவர் தயங்கினார். இந்தத் தயக்கம் கடிதத்தின் இரண்டாவது பந்தியில் 'வடக்கு, கிழக்கு மக்கள் தொடர்ச்சியாக 'இணைந்த வடக்கு, கிழக்கில் உள்ளக சுயநிர்ணயத்துடான சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கே ஆணை வழங்கியுள்ளார்கள்' என்று திருத்தம் செய்வதற்கு வழிவகுத்தது. எனினும், ஏனைய தலைவர்கள் யாரும் அந்த திருத்தத்தினை எதிர்க்கவில்லை.

அதேநேரம், குறித்த ஆவணத்துடன் உடனடியான விவகாரங்கள் பற்றிய இணைப்பொன்றும் காணப்பட்டது. அதுதேவையில்லை என்று சுமந்திரன் வாதிட்டார். மலையக, முஸ்லிம் தரப்புக்கள் இல்லாத படியால் இணைப்பு வேண்டாம் என்று தர்க்கித்தார்.

ஆனால், சித்தார்த்தன், திம்பு பேச்சுவார்த்தையின்போது விடுதலை இயக்கங்களும், அரசியல் கட்சிகளும் மலையக மக்களின் பிரசன்னம் இல்லாதபோதும் பிரஜாவுரிமை விடயத்தினையும் ஒன்றாக உள்ளீர்த்திருந்தன. அது திம்புக் கோட்பாட்டிலும் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

அதுமட்டுமன்றி, தமிழரசுக்கட்சி மலையக மக்களையும் இணைத்து தான் ஆரம்பிக்கப்பட்டது என்றும் கூறினார். இதனால் சம்பந்தன் நியாயத்தைப் புரிந்து இணைப்பை நிராகரிக்கும் சுமந்திரனின் நிலைப்பாட்டை நிராகத்தார். ஈற்றில் இணைப்பில் காணாமலாக்கப்பட்டவர்கள் விவகாரம் சேர்க்கப்பட வேண்டும் என்று சுமந்திரன் கூறவும் அது இணைக்கப்பட்டது.

பின்னர் ஒருவாறாக, கடந்த 18ஆம் திகதி இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடத்தில் ஆவணம் கையளித்துவிட்டாகி விட்டது. இப்போது சுமந்திரனுக்கும், சுரேந்திரனுக்கும் இடையில் சிக்கல்கள் தொடர்கின்றன.

இந்த ஆவணத்தயாரிப்புக்கான ஒருங்கிணைப்பு மற்றும் வரைவுகளை தானே செய்தேன் என்கிறார் சுரேந்திரன். ஆனால் அனைத்து வரைவுகளையும் நானே செய்தேன். தமிழரசுக் கட்சி அங்கீகரித்த வரைவு தான் இப்போது பிரதமர் மோடிக்கு சென்றுள்ளது என்கிறார் சுமந்திரன்.

இனி, பிரதமர் மோடிக்காண ஆவணத்தில் காற்புள்ளி வைத்தேன், முற்றுப்புள்ளி வைத்தேன் என்று கூறி உரிமை-களைக் கூறிக்கொண்டு பலர் கிளம்பி வருவார்கள். அது அவர்களின் 'சுயலாப அரசியல்'. அந்த முகங்களை மக்கள் அடையாளம் காண வேண்டும். அது அவர்களின் விவகாரமாக இங்கு விட்டு விடப்படுகின்றது.

சரி, ஆவணம் கையளித்தாகிவிட்டது. அடுத்தது என்ன? இன்னும் சில நாட்களில் பிரதமர் மோடி ஆகக்குறைந்தது ஒரு டுவிட்டில் 'இலங்கைத் தமிழர்கள் நிம்மதியாக வாழ வேண்டும். இந்தியா நீண்டகாலமாக கொண்டிருக்கும் நிலைப்பாடான 13ஐ அமுலாக்க வேண்டும். மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும்' என்று பதிவு செய்வார்.

அல்லது, இந்திய உயர்ஸ்தானிகர் இதேகருத்தினை தமது டுவிட்டரிலும்,கூட்மைப்பிடத்திலும்கூறுவார்.அவ்வளவுதான். அதற்கு அப்பால் நடைபெறப்போவது ஒன்றுமில்லை.

அவ்விதமாக ஏதேனும் நடைபெறுவதாக இருந்திருந்தால் இந்தியா தற்போது முண்டியடித்துக்கொண்டு இலங்கைக்கு வழங்கிய 900மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியை காலதாமதப்படுத்தியிருக்கும். ஆனால் இந்தியாவுக்கு தமிழர்கள் விவகாரத்தினை வைத்து பேரம்பேசுவதற்கு மேலாக, தன் தேச நலனைக் கருத்திற் கொள்ள வேண்டியிருக்கின்றது.

தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் தலைக்கே ஆபத்து என்ற நிலையில் இருக்கின்றது இந்தியா. இந்தியாவுக்கு வடக்கே சீனாவின் நெருக்கடிகள், மறுபக்கம் பாகிஸ்தானின் பிரச்சினைகள், இப்படி இருக்க தென்னிந்தியாவிலிருந்து வெறும் 32கிலோமீற்றர் தொலைவில் உள்ள இலங்கையும் சீனாவிடத்தில் முழுமையாக சென்றுவிட்டால் நிலைமை மோசமாகி விடும் என்பதில் இந்தியா திடமாகவுள்ளது.

ஆகவே, தமிழர்களா, தன் தேச நலனுக்காக சிறிலங்கா அரசாங்கமா என்றால் இந்தியா நிச்சயமாக, தமிழர்களை கைவிடமாட்டோம் என்று கூறி சிறிலங்கா அரசாங்கத்தின் பக்கம் தான் செல்லும். அது தான் யார்தத்தம். ஆனால் கசப்பானது.

இந்தியாவுக்கு தார்மீக கடமை உள்ளது என்று சம்பந்தன் இப்போது கூறுகின்றார். ஏனைய தலைவர்கள் எப்போதுமே கூறுகின்றார்கள். ஆனால் இந்தியா சம்பந்தன் தும்புக்கட்டையாலும் தொட மாட்டேன் என்று கூறிய, வெறும் எலும்புக்கூடாகவுள்ள ஒற்றையாட்சிக்குட் பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் செல்லத் தயாரில்லை.

ஏன், இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் உள்ள வடக்கு, கிழக்கு இணைப்பினைச் செய்வதற்கே தயாரில்லை. கால தாமதமாகும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அழுத்தமளிக்க தயாரில்லை.

அவ்வாறு, இந்தியா இருக்கையில் சம்பந்தன் உள்ளிட்ட தமிழ் கட்சிகள் கூறும் சுயநிர்ணய உரித்தை அந்நாடு எவ்வாறு வழங்கும். மேலும், தனது தென் மாநிலங்களில் ஏற்கனவே தனிநாட்டுச் சிந்தனைகள் அதிகளவில் உள்ள நிலையில் தமிழர்களுக்கான சுயநிர்ணயத்தை இந்தியா வழங்க முன்வருமா? ஒருபோதும் வரவே வராது.

அப்படியிருக்க, மேற்படி விடயங்களைப் புரிதலின்றி அரைநூற்றண்டுகள் அரசியலில் இருந்தோம் என்று மார்பு தட்டும் தலைவர்கள் இந்தியாவிடம் சென்று உள்ளக சுயநிர்ணத்தை வழங்கு என்று கோருவது எவ்வளவு தூரம் முட்டாள் தனமானது. ■



# ஏன் சென்றார் 'வாங் யி'

**தந்திரீகன்**

சிறிலங்காவுக்கு இம்மாதத்தின் கடந்த 8,9ஆம் திகதிக-ளில் உத்தியோக பூர்வமான விஜயமொன்றை மேற்கொண்டு சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் யி விஜயம் செய்திருந்தார்.

இந்த விஜயத்தின் போது எவ்விதமான நிகழ்ச்சி நிரல்கள் காணப்படுகின்றது என்பதையே சீன வெளிவிவகார அமைச்சோ அல்லது இலங்கைக்கான சீன தூதரகமே வெளியிடுவதை தவிர்த்து இரகசியம் காத்து வந்தது.

பொதுப்படையில், சிறிலங்காவுக்கும், சீனாவுக்கும், இடையிலான இருதரப்பு இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 65ஆண்டுகளாகின்மையையும், அரிசி, இறப்பர் ஒப்பந்தம் கைச்சாத்தாக்கப்பட்டு 70ஆண்டுகள் பூர்த்தியையும் முன்னிட்டு ஏற்பாடான நிகழ்வில் பங்கேற்பதற்காகவே சீன வெளிவிவகார அமைச்சர் சிறிலங்காவுக்குச் செல்வதாக தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறான நிலையில் சிறிலங்காவுக்கச் சென்றிருந்த சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யியை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் அவருடைய சகபாடிகளான இராஜாங்க அமைச்சர் டி.வி.சாணக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகியோரே வரவேற்றிருந்தனர்.

இங்கு, அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஏன் சீன வெளி விவகார அமைச்சரை வரவேற்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்பது முதலாவது கேள்விக்குரிய விடயம். சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் போன்றவர்கள் வெளிநாட்டு அமைச்சர் உள்ளிட்ட முக்கிய பதவிகளில் இருக்கும் போது நாமல் அனுப்பி வைக்கப்பட்டமையானது 'ராஜபக்ஷ' குடும்பத்திற்குள் நாமலை அடுத்த அரசியல் வாரிசாக 'அடையாளப் படுத்தும்' செயற்பாடு என்பது வெளிப்படுகின்றது.

இதேநேரம், சிறிலங்காவுக்குச் சென்றிருந்த சீன வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களை சந்தித்ததோடு, துறைமுக நகரத்தில் மெரினா உல்லாச நடைபாதையையும் திறந்து வைத்திருந்தார்.

அத்துடன், துறைமுக நகரில் நடைபெற்ற நிகழ்விலும் கலந்து கொண்டுவிட்டு தனது விஜயத்தினை பூர்த்தி செய்து கொண்டு பெய்ஜிங்கிற்கு திரும்பியுள்ளார்.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி சிறிலங்கா வுக்குவுக்குச் செல்வது இது முதற்தடவை அல்ல. இதற்கு முன்னரும் விஜயம் செய்துள்ளார். சந்திப்புக்களை நடத்தியுள்ளார்.

குறிப்பாக, சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் பதவி ஏற்றுக்கொண்டதன் பின்னர் மூன்றாவது தடவையாக இப்போது வருகின்றார்.

இதற்கு முன்னதாக, 2020ஜனவரியில் வருகை தந்திருந்தார். பின்னர் கடந்த ஆண்டு ஜ/னில் வருகை தந்திருந்தார். இப்போது ஆண்டின் முதல் மாதத்திலேயே வருகை தருகின்றார்.

இதற்கிடையில் சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் அரசியல் விவகாரக் குழு உறுப்பினரான யாங் யீச்சியும், 2020இல் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். பின்னர், சீன பாதுகாப்பு அமைச்சர் வெய் பெங் 2021 மே மாதம், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயங்கள் அனைத்துமே சீன, இலங்கை இருதரப்பு உறவுகள் என்பதற்கு அப்பால் சீனாவின் நலன்களை மையப்படுத்தியவை என்பது தான் மிகவும் முக்கியமான விடயமாகும்.

தற்போது கூட சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி மாலைதீவுக்குச் சென்று விட்டுத்தான் சிறிலங்காவுக்கு சென்றிருந்தார். வாங் யி சிறிலங்கா செல்வதற்கு முன்னர் தான் சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட 20ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை, சிறிலங்கா நிராகரித்த நிலையில் இழப்பீடாக 6.9மில்லியன் டொலர்கள் இழப்பீட்டை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் தான் கறுப்பு பட்டியலில் இட்ட மக்கள் வங்கியையும் சீனா பட்டியலில் இருந்து நீக்குவதாக அறிவித்தது.



மறுபக்கத்தில், வடக்கு,கிழக்கு, மற்றும் தெற்கு மாகாணங்களில் சாதாரண பொதுமக்களுக்கு நன்கொடைகள் என்ற அடிப்படையில் பல மில்லியன் மானியங்களை வழங்கி வருகின்றது. சிறிலங்காவின் உண்மையான நண்பன் என்றும், இலங்கை மக்கள் மீது அதீத கரிசனை கொண்ட நாடு என்றும் தன்னைக் காண்பிக்கின்றது.

ஆனால், விவசாய உரவிடயத்திலும், வடக்கின் மூன்று தீவுகளில் புதுப்பிக்க சக்தி திட்ட விடயத்திலும் சீனா தனது உண்மையான முகத்தை வெளிப்படுத்தி விட்டது. சீனா, எந்தவொரு விடயத்தினையும் முன்னெடுக்கின்றது என்றால் அதில் தன்னுடைய நலன்களுக்குத் தான் அதிக-ளவில் முக்கியத்துவத்தினை வழங்குவதாக இருக்கும் என்பதை சிறிலங்காவுக்கும், ராஜபக்ஷாக்களுக்கும் தெளி-வாக கூறிவிட்டது.

அவ்வாறான பின்னணியில் சீன வெளிவிவகார அமைச்சர் வெறுமனே துறைமுக நகரின் நடைபாதையை திறந்து வைப்பதற்காக மாலைதீவிலிருந்து வருகை தந்திருப்பார். ஆகவே தான் அவருடைய வருகையின் உண்மையான காரணத்தினை வெளிப்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் பகிரங்கமாக வலியுறுத்துகின்றன.

ஏனென்றால் சீனாவின் உண்மையான முகம் கண்முன்னே இருக்கின்றது. சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட 200மில்லியன் டொலர்கள் கடனை மீள செலுத்த முடியாமையினால், உகண்டாவிலுள்ள ஒரேயொரு சர்வதேச விமான நிலையத்தின் நிர்வாகம், அந்த நாட்டு அரசாங்கத்திடமிருந்து இல்லாது போயுள்ளது.

ஆக, வாங் யி, வெறுமனே கொண்டாட்டத்திற்கு வந்துவிட்டு வெறுங்கையுடன் சென்றார் என்று கூறுவதும், அதனை நம்புவதும் முட்டாள் தனமானது. அப்படியென்றால் வாங் யின் வருகையின் பின்னணி என்ன என்று சற்று ஆழமான தேடலைச்செய்யும்போது இரண்டு விடயங்கள் துலங்குகின்றன.

அதில் முதலாவது, சீன தூதுவர் கீ சென் ஹாங்கின் வடக்கு விஜயத்தின் பின்னர் தான் வாங் யி வந்திருக்கின்றார். சீனத்தூதுவர் வடக்கிற்குச் சென்றபோது பருத்தித்துறை முனைக்குச் சென்று 'ட்ரோன்' அவதானிப்புச் செய்தார். அதேபோல அரியாலை கடலட்டைப் பண்ணையிலும் 'ட்ரோன்' அவதானிப்புச் செய்தார். யாழ்.நூலகத்தை டிஜிட்டல் மயப்படுத்துவதாக ஒத்துக் கொண்டார். குதிரைமலை, புளியந்தீவு ஆகிய சிறு தீவுகளை தத்தெடுப்பதற்கு களத்தை ஆராய்ந்துள்ளார். கௌதாரி-முனையிலும் கரிசனை செலுத்தியுள்ளார். புதுப்பிக்க சக்தி திட்டத்தினை விரைந்து முன்னெடுப்பதற்கும் விரும்பம் காட்டியுள்ளார். ஆக இவற்றின் அடுத்த கட்ட நகர்வுக்கான உறுதிப்பாட்டை அரசாங்கத்திடமிருந்து பெறுவது மிகவும் முக்கியமானது. ஆகவே கடன் உதவிகளை வழங்குவதாக கூறி உறுதிப்பாட்டை பெற்றிருக்கலாம்.

இரண்டாவது, ஆபிரிக்க நாடுகளில் அதிகளவ-ில் முதலீடுகளைச் செய்துள்ள சீனா, அந்த நாடுகளில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் கொரோனா தொற்றால் வருமான இழப்பினைச் சந்தித்துள்ளது. இந்த நிலையில் தான் தெற்காசியவின் பக்கம் தனது பார்வையை திருப்பியுள்ளது சீனா. இதில் பங்களாதேஷ், மியன்மார், நேபாளம் உள்ளிட்ட நாடுகள் தமது கட்டுக்குள் அல்லது தமக்கு சாதகமாக இருக்கின்ற நிலையில் சிறிலங்கா மற்றும் மாலைதீவினை வளைத்துப்போட்டு விட்டால் தனது வருமான இழப்பு மீள சீராகும் என்று சீனா கணக்குப் போட்டிருக்கலாம். அதற்கான பூர்வாங்கச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும் மாலைதீவு, சிறிலங்கா ஆகிய நாடுகளுக்கு தனது விஜயத்தினை திட்டமிட்டிருக்கலாம்.

ஆனால் தற்போது வரையில் சீன வெளிவிவகார அமைச்சரின் விஜயம் சிதம்பர ரகசியமாகவே உள்ளது. எனினும், அடுத்து வரும் நாட்களில் சீனா சிறிலங்கா அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று கடன்களையும், வட்டியையும் மீள அளிப்பதற்கான காலத்தினை நீடிப்புச் செய்தால் அல்லது அதில் நெகிழ்வுத்தன்மையைக் காண்பித்தால் மேற்கண்ட காரணங்கள் உறுதியாகும்.

# ஓடிடியில் வெளியாகியுள்ள ‘சினம்கொள்’ திரைப்படத்திற்கு பேராதரவு தாருங்கள்!






## வசனகர்த்தா மற்றும் பாடலாசிரியர் தீபச்செல்வன்

தடுப்புச் சிறையில் இருந்து விடுதலையாகும் முன்னாள் விடுதலைப் புலிப் போராளியின் வாழ்க்கை போராட்டத்தைப் பேசும் சினம்கொள் திரைப்படத்தை ஈழத்தில் உள்ள மக்கள் கட்டணமின்றி பார்வையிடலாம் என்று ஈழத்து எழுத்தாளரும் சினம்கொள் படத்தின் வசனகர்த்தா மற்றும் பாடலாசிரியரு மான தீபச்செல்வன் தெரிவித்துள்ளார்.

ஓடிடிதளத்தில் (eelamplay.com) வெளியாகியுள்ள சினம்கொள் படத்திற்கு ஈழ மக்கள் பேராதரவு வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். யாழ் ஊடக மையத்தில் சினம்கொள் திரைப்படக் குழுவி னர் நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

“சினம்கொள் திரைப்படத்தை இயக்குனர் ரஞ்சித் ஜோசப் எழுதி இயக்கியுள்ளார். அவர் பிச்சைக்காரன், செல்லாமலே, சிவப்பு மஞ்சள் பச்சை ஆகிய படங்களின் இயக்குனர் சசியிடம் உதவி இயக்குனராக கடமையாற்றியவர். அத்துடன் இந்தப் படத்தில் ஒளிப்பதிவாளராக பழனிகுமார் மாணிக்கமும் இசையமைப்பாளராக என்.ஆர். ரகுநந்தனும் பணியாற்றியுள்ளார்.

மலையகம், வடக்கு கிழக்கு, சிங்கள கலைஞர்கள், தமிழக கலைஞர்கள், இந்தியக் கலைஞர்கள், கனேடிய கலைஞர்கள் மற்றும் சர்வதேச கலைஞர்கள் எனப் பரதரப்பட்டவர் களும் இணைந்து உருவாக்கிய கூட்டுப்படைப்பான சினம்கொள் உலகத் தரமான படமாக இருப்பதாகவே தமிழக திரைப்பட பிரபலங்கள் வியந்து பாராட்டி இருப்பதையும் இங்கே நினைவுபடுத்துகிறேன்.

இந்தப் படத்தில் கதாநாயகனாக ஆண்டவன் கட்டளை படத்தில் விஜய்சேதுபதியுடன் இணைந்து நடித்த அரவிந்த் சிவஞானமும் கதாநாயகியாக நர்வினி டேவிட்டும் நடித்துள்ளனர். அத்துடன் பெருமளவான கதாபாத்திரங்களில் ஈழத்தை சேர்ந்த கலைஞர்கள் நடித்திருக்கின்றனர்.

ஈழ மண்ணிக்காட்சியையும் ஈழ மண்ணின் கதையையும் கலை அழகியல் குன்றாமல் இந்தப் படம் பேசுகின்றது.

அத்துடன் இந்திய திரைப்பட தணிக்கைச் சபை இந்தப் படத்திற்கு யூ சான்றிதழ் அளித்துள்ளது. இந்திய தணிக்கை சபையின் யூ சான்றிதழ் பெற்ற முதல் ஈழத் திரைப்படமும் இதுவே. அத்துடன் இலங்கையின் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தணிக்கை சபையும் இந்தப் படத்திற்கு சான்றிதழ் அளித்துள்ளது.

இந்தப் படத்தை பார்த்துள்ள தமிழகத் திரைப்பிரபலங்கள் பலரும் வெகுவாக பாராட்டி வருவதையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். குறிப்பாக நடிகர் நாசர் இந்தப் படத்தை வெகுவாக பாராட்டி நேர்காணல் ஒன்றை வழங்கியிருக்கிறார். அதேபோல இயக்குனர் இமையம் பாரதிராஜா, நடிகர் சத்தியராஜ், இயக்குனர் சசி, இயக்குனர் சீனு ராமசாமி, கவிஞர் வைரமுத்து எனப் பலரும் வியக்கும் படைப்பாக சினம்கொள் உருவாகி உள்ளமை ஈழத் தமிழர்களுக்கு பெருமை சேர்க்கும் கலைப்பணி என்றே கருதுகிறேன்.

உலக நாடுகளில் இந்தப் படம் பரீட்சார்த்தமாக திரையிடப்பட்ட போது பெருமளவான மக்கள் கலந்துகொண்டு ஆதரவு அளித்தார்கள். படத்தை பார்த்த அத்தனை பேரும் கண்ணீரோடும் நெகிழச்சியோடும் சென்றதைக் கண்டோம்.

இப்போது நாங்கள் இந்த ஊடக சந்திப்பை நடத்துவதற்கான நோக்கம் யாதெனில், தற்போது சினம்கொள் ஈழம்பிளே (eelamplay.com) என்ற ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ளது. ஈழத்தில் வாழ்கின்ற மக்கள் எந்த விதமான கட்டணங்களும் இல்லாமல் இப் படத்தை பார்க்கலாம். எந்த மக்கள் பற்றிய திரைப்படமோ அந்த மக்களே இத் திரைப்படத்தை முழுமையாக பார்க்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இயக்குனர் ரஞ்சித் இந்த வாய்ப்பை ஏற்படுத்தி தந்துள்ளார். அதேபோல வெளிநாடுகளில் படத்தை பார்க்கத் தவறிய உலகத் தமிழர்கள் அனைவரும் இப் படத்தை பார்க்க வேண்டும்.

எனவே எமது மக்கள் இந்தத் திரைப்படத்தை பார்வையிட வேண்டும். பேராதரவு வழங்க வேண்டும். நிச்சயமாக உங்கள் அனைவரையும் மிகவும் ஈர்க்கின்ற படமாக மீண்டும் மீண்டும் பார்க்க்கின்ற படமாக சினம்கொள் அமையும் என்று திடமாக நம்புகிறேன். ஊடக நண்பர்களும் எமது தாயக பத்திரிகைகளும் இந்தப் படம் பற்றிய செய்தியை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.





# உக்ரைன் எல்லையில் ரஷ்ய படைகள்
# மூளுமா மூன்றாவது உலகப்போர்?

**பூலோகன்**

கம்யூனிச நாடுகளில் ஒன்றான சோவியத் ஒன்றியம் கடந்த 1991ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வீழ்ச்சி அடைந்தது. அப்போது ரஷ்யா, உக்ரைன் பெலராஸ் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் உருவானது. இருப்பினும், விளாடிமீர் புட்டீன் தலைமையிலான ரஷ்யாவுக்கு மீண்டும் சோவியத் ஒன்றியத்தைக் கட்டமைக்க வேண்டும் என்ற திட்டம் உள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தகவல்கள் காணப்படுகின்றன.

இந்தப் பின்னணியில் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் ஒன்றான உக்ரைன் எல்லையில் ரஷ்யப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. இதனால் உலக அரசியல் அரங்கே பெரும் பரபரப்படைந்துள்ளது. ஏனென்றால் கடந்த 2014இல் இதேபோன்ற நடவடிக்கைகளுக்குப் பின்பு தான் கிரிமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டிருந்தது. இவ்வாறான நிலையில் தான் ரஷ்யாவின் படைக்குவிப்பு நடவடிக்கைகளால் மேற்குலகம் கதிகலங்கியுள்ளது. அதுமட்டுமன்றி ரஷ்யாவுடன் பல்வேறு மேற்குலக நாடுகளும் தீவிர பேச்சுவார்த்தைகளையும் எச்சரிக்கைகளையும் விடுத்துள்ளன.

குறிப்பாக, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்யாவின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள தோடு உக்ரைனைக் காப்பாற்றுவதற்கு அமெரிக்க முழுமையாக ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அறி வித்துள்ளார். அத்துடன் ‘உக்ரைன் தாக்கப்பட்டால், இதுவரை கண்டிராத மிக மோசமான தாக்குதலை ரஷ்யா எதிர்கொள்ளும்’ என்று பகிரங்கமாகவே கூறியுள்ளார். அதேநேரம் அந்நாட்டின் இராஜாங்கச் செயலாளர் அன்டணி பிளிங்கன், ரஷ்யா உக்ரைன் மீது படை எடுத்தால் நேட்டோ படைகள் உக்ரைனுக்கு ஆதரவளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரித்தானியா உக்ரைனின் தற்பாது காப்பிற்காக குறுகிய தூர ஏவுகணைகளை வழங்குவதாக பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளர் பென் வாலஸ் அறிவித்துள்ளார். அதேநேரம், ரஷ்யாவின் செயற்பாடுகள் இவ்வாறு நீடித்தால் பொருளாதார தடைகளை விதிப்பதற்கு தயங்கப்போவதில்லை என்று கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். இதனை விடவும் பல ஐரோப்பிய ஒன்றியத்தினைச் சேர்ந்த நாடுகளும் தமது கண்டங்களை வெளியிட்டுள்ளன.

ஆனால், இத்தனை கண்டனங்களும், எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டபோதும், மேற்குலக நாடுகள் தேவையில்லாமல் அச்சப்பட்டுக் கொள்வதாகவும் ரஷ்யாவுக்குப் போர் தொடுக்கும் திட்டம் எதுவும் இல்லை என்றும் அந்நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் புட்டீன் தரப்பில் விளக்கம் அளித்துள்ளது. இருப்பினும், ரஷ்யாவின் கடந்த கால வரலாற்றை வைத்துப் பார்க்கும் போது இதை அப்படியே உண்மையென நம்ப மேற்குலக நாடுகள் தாயாராக இல்லை.

புவியியல் ரீதியாக உக்ரைன் மிக முக்கியமான பகுதியில் அமைந்துள்ளது. ரஷ்யா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என இரு நாடுகளுடனும் உக்ரைன் தனது எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது. இதனால் ரஷ்யாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையேயான ஒரு முக்கிய புள்ளியாக உக்ரைன் காணப்படுகின்றது. இதுவே அமெரிக்காவையும், ஐரோப்பிய ஒன்றியத்தையும் உக்ரைன் மீது அதிக அக்கறை காட்டச் செய்வதற்கான காரணியாக உள்ளது.

பொருளாதார ரீதியாக அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளுடன் ஒப்பிடும்போது ரஷ்யா சிறிது பலம் குன்றி இருந்தாலும், தொழில்நுட்பம், அணு ஆயுதம் முதல் இராணுவம் வரை ரஷ்யா நிச்சயம் மிகப் பலம் பொருந்தியதொரு எதிரி என்றே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குல சக்திகள் கருதுகின்றன. எனவே ரஷ்யாவை சமாளிப்பதற்கு ஒரே வழி உக்ரைனை ரஷ்யக் கட்டுப்பாட்டில் இருந்து விலக்கி வைப்பதேயாகும்.

இதேநேரம், ரஷ்யாவுடன் ஆழமான கலாசார உறவுகளைக் கொண்டுள்ள உக்ரைனில் ரஷ்ய மொழி பரவலாக பேசப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஆதரவாக உக்ரைன் எடுத்து வரும் நடவடிக்கைகள், குறிப்பாக நோட்டோவில் சேரக்கூடாது என்பறு ரஷ்யா வெளிப்படையாகவே தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தது. இருப்பினும், ரஷ்யாவின் வலியுறுத்தலுக்கு உக்ரனை செவி சாய்க்க மறுக்கிறது. கடந்த 2014இல் சோவித் ஒன்றிய காலத்து உக்ரைனின் ஜனாதிபதி பதவியை நீக்குவதாக உக்ரைன் அறிவித்தது.

உக்ரைனின் அச்செயற்பாடு ரஷ்யாவுக்கு எச்சரிக்கை மணியாக இருந்தது. அதன் பின்னரே உக்ரைனின் தெற்கு தீபகற்பமான கிரிமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது. அதேபோல உக்ரைனின் கிழக்குப் பகுதியைக் கைப்பற்றிய பிரிவினைவாதிகளையும் அது ஆதரித்தது. கடந்த 8 ஆண்டுகளாக அங்கு நடைபெறும் மோதல்களில் இதுவரை 14,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டும் உள்ளனர்.

அதேநேரம், உக்ரைனில் கிளர்ச்சியாளர் இருக்கும் பகுதிகளில் வாழும் 5 இலட்சம் பேருக்கு ரஷ்யா தனது நாட்டின் பிரஜைகளாக கருதி கடவுச்சீட்டை வழங்கியுள்ளது. படைக்குவிப்பும், கடவுச்சீட்டு வழங்கலும் தொடர்பற்ற விடயமாக இருந்தாலும் இந்தச் செயற்பாடு மூலம் எதிர்வரும் காலத்தில் உக்ரைன் நாட்டில் ரஷ்யா நுழைந்தால் தனது குடிமக்களைக் காக்கும் நடவடிக்கை என்று கூறி ரஷ்யா தப்பித்துக்கொள்ளும் எனவும் நோக்கப்படுகின்றது.


உக்ரைன் உள்ளிட்ட முன்னாள் சோவியத் நாடுகளில் நேட்டோ அமைப்பு வரக் கூடாது என்பதே ரஷ்யாவின் முக்கிய கோரிக்கை. இதை நிறைவேற்ற வேண்டும் என்றால் ஏற்கனவே நேட்டோ படைகள் உள்ள போலந்து, எஸ்டோனியா, லாட்வியா மற்றும் லிதுவேனியா நாடுகளில் இருந்து நேட்டோ தனது வீரர்களைத் திரும்பப் பெற வேண்டும். ஆனால் ரஷ்யாவின் இந்தக் கோரிக்கையானது அதன் ‘மீண்டும் சோவியத் ஒன்றியம்’ என்ற திரைமறைவு நிகழ்ச்சி நிரலைக் கெண்டது என்று உலக நாடுகள் கூறுகின்றன. இதனால் தான் ரஷ்யாவின் நேட்டோ தொடர்பான கோரிக்கையை அமெரிக்கா மற்றும் நேட்டோ அமைப்பு திட்டவட்டமாக மறுத்துள்ளது. மேலும், ரஷ்யாவின் நடவடிக்கைக்கைகளால் அச்சம் கொண்டுள்ள அமெரிக்கா, சுவீடன், டென்மார்க் நாடுகளும் தனது எல்லையில் வீரர்களைக் குவித்து வருகிறது.

இதனால் உக்ரைன் எல்லையில் மட்டுமின்றி மேற்கு ஐரோப்பா முழுவதுமே சற்று பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது. நேட்டோ அமைப்பில் இணைவது குறித்த முடிவை உக்ரைன் தான் எடுக்க வேண்டும் என்றும் இதில் மற்ற நாடுகள் தலையிடக் கூடாது என்றும் நேட்டோ பொதுச் செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் தெரிவித்துள்ளார். அதேநேரம் உக்ரைன் மீது ரஷ்யா எப்போது வேண்டுமானாலும் போர் தொடுக்கலாம் என்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் அழுத்தம் அதைச் சற்று தாமதப்படுத்த மட்டுமே உதவும் எனக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், பொதுவாக எந்தவொரு வல்லரசும் பலம் பொருந்திய நாடுகள் தமக்கு அருகில் இருப்பதை விரும்பாது. உதாரணத்திற்கு சீனா கனடாவுடன் கூட்டணி அமைப்பதை அமெரிக்கா ஒரு போதும் ஏற்றுக்கொள்ளது. அதேபோல தமது எல்லைக்குள் அமெரிக்காவின் வருகையை ரஷ்யா விரும்பவில்லை. ஆக, இந்த இரண்டு நாடுகளின் அதிகாரப் போரின் இடையில் மாட்டிக்கொண்ட வெறும் பலியாடு மட்டுமே உக்ரைன்.

இது மூன்றாம் உலகப்போரை உருவாக்குமா என்றால் போர் மூளும் பட்சத்தில் ஏனைய உறுப்பு நாடுகள் அதில் கலந்துகொண்டால் நிலைமைகள் மோசமடையும். அது மூன்றாம் உலகப்போருக்கே வழி வகுக்கும். ஏனென்றால் ரஷ்யா தனது ஏகாதிபத்தியத்துக்கு எதிரான நிலைப்பாட்டில் துளியளவும் இறங்காது. அதற்கு உறுதுணையாக நிச்சயம் சீனா இருக்கும்.





























நமது ஈழநாடு அறக்கட்டளை ஊடாக தைப்பொங்கல் தினத்தினை முன்னிட்டு இம்முறை இரண்டு இலட்சத்திற்கு மேலான வாழ்வாதார உதவித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வன்னி மற்றும் மன்னார் பிரதேசங்களை சேர்ந்த மாவீரர் மற்றும் போரில் அங்கவீனமுற்ற 10 குடும்பங்களிற்கு பொங்கல் அன்பளிப்பாக தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட மிகவும் வறுமை நிலையிலுள்ள 4 மாவீர் மற்றும் முன்னாள் போராளி குடும்பங்களிற்கு சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் முகமாக ஆடு மற்றும் கோழி கொள்வனவிற்காக தலா இருபதாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் செயற்பாட்டாளர்களான ஹன்வர் முஹமட் இப்ரான் மற்றும் குகசோபனா நகுலநாதன் ஆக-யோரின் நிதிப் பங்களிப்புடன் நமது ஈழநாடு மேற்படி உதவித் திட்டத்தினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.